2019 ஜூலை 10]

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் 60 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. எனவே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு புதிய கட்டடத்தைக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பழைய கட்டடம் என்று சொன்னால், அதனை அரசு அதிகாரிகள் ஆய்வு செய்து* demolition certificate *தருவார்கள். பின்னர் அங்கு புதிய கட்டடம் அரசு சார்பாக கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

77—

உலர்களம்

***13403—திரு. வி.எஸ். காளிமுத்து:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் தொகுதியில் மூலனூர் வஞ்சிவலசுவில் உலர்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தாராபுரம் தொகுதியில் மூலனூர் வஞ்சிவலசுவில் உலர்களம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2019 ஜூலை 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தொகுதியில் உள்ள மூலனூர் வஞ்சிவலசு விவசாயிகள் அதிகம் உள்ள இடம். அங்கு அவர்கள் பயிரிடும் பயிர்களைக் காயவைப்பதற்கு இடம் இல்லாமல் சுற்றுவட்டாரத்தில் அலைந்துகொண்டிருக்கிறார்கள். எங்களது மாவட்ட அமைச்சர் அவர்கள் அருகில் இருக்கிறார்கள். அவர்கள் பரிந்துரை செய்து தருவார்கள். எனவே, வஞ்சிவலசுவில் ஓர் உலர்களம் அமைத்துத்தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்தில், திருப்பூர் விற்பனைக் குழுவின் சார்பாக 45 உலர்களங்கள் மற்றும் விற்பனைக் கூடங்களும், நீர்வள, நிலவளத் திட்டத்தின்மூலம் சுமார் 58 உலர்களங்களும் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. தாராபுரம் தொகுதியில் மூலனூர் வஞ்சிவலசு கிராமத்திலிருந்து 4 கி.மீ. தொலைவில் திருப்பூர் விற்பனைக் குழுவில் செயல்படும் மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 5 உலர்களங்கள் அமைக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளன. மேலும், மூலனூர் வஞ்சிவலசு கிராமத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ள பேரநாயக்கன்வலசு கிராமத்தில் ஓர் உலர்களம் அமைக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளது. இதுதவிர தாராபுரம் தொகுதிக்குட்பட்ட திருப்பூர் விற்பனைக் குழுவின்கீழ் செயல்படும் அலங்கியம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 6 உலர்களங்கள் அமைக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளன என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், உலர்களம் அமைக்கும் திட்டம் தற்சமயம் நடைமுறையில் இல்லை என்ற விவரத்தினையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2019 ஜூலை 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதெல்லாம் சரிதான். ஆனால், உலர்களங்கள் அந்தந்த* office*–ல்தான் அமைக்கப்பட்டிருக்கிறதே தவிர, விவசாயிகளின் பயன்பாட்டிற்காக கிராமங்களில் இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள், அங்காடிகளில்தான் இந்தக் களங்களை அமைத்திருக்கிறீர்கள். நெல் கொள்முதல் செய்கின்ற இடத்தில் இருக்கிறது. மூலனூர் விற்பனை நிலையத்தில் வைத்திருக்கிறீர்கள். ஆனால், கிராமத்தில் உலர்களம் இல்லை. ஆகவே, கிராமங்களில் உலர்களம் அமைத்துத் தருமாறு உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே வாங்கப்படுகிற விவசாயப் பொருட்களுக்கு 1 சதவிகித சேவை வரியை அந்த விற்பனைக் கூடத்தில் விதிக்கிறார்கள். அதே நேரத்தில், வெளியே உற்பத்தியாகி, வியாபாரிகள் விவசாயிகளிடத்தில் வாங்குகிற பொருட்களுக்கும், குறிப்பாக, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களிலிருந்து வருகிற விவசாயப் பொருட்களுக்கும் 1 சதவிகிதம் வரியை விதிக்கிறார்கள். தமிழ்நாட்டில் இயற்கையாக மழை பொய்த்துப் போயிருக்கிற இந்த நேரத்தில், விவசாயப் பொருள் உற்பத்தி என்பது மிகக் குறைவாக இருக்கிறது. எனவே, ஆந்திராவிலிருந்து வருகிற நெல், அதேபோன்று கர்நாடகாவிலிருந்து வருகிற மணிலா, நெல் போன்றவற்றிற்கு 1 சதவிகித வரியை விதிக்கிறபொழுது, அரசு அலுவலர்கள் தொல்லை தருவதாக வியாபாரிகள் நினைக்கிறார்கள். எனவே,*

உணவுப் பொருட்கள் வராமல் இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, அரசு இதில் தனிக் கவனம் செலுத்திட வேண்டும். வெளியில் வாங்குகிற உணவுப் பொருள்களுக்கு வியாபாரிகளுக்கு 1 சதவிகிதம் வரி தேவையில்லை என்ற நிலை ஏற்படும் என்று சொன்னால், கர்நாடகம், ஆந்திரா போன்ற இடங்களில் இருக்கிற அந்த விவசாய உற்பத்திப் பொருட்கள் தமிழ்நாட்டில் வருவதற்கு வாய்ப்பாக அமையும். எனவே, இதில் தனிக் கவனம் செலுத்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1% சேவை வரி தேவையில்லை என புதிய ஆணை பிறப்பிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனைக்கூடத்திற்கு வரும் அந்த விவசாயப் பொருட்களுக்கு வியாபாரிகளிடமிருந்து 1 சதவிகிதம் சேவை வரி வசூலிக்கப்படுகிறது. முன்னாள் அமைச்சரான மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நேற்றையதினம் என்னிடம் இந்தக் கருத்தை வலியுறுத்தினார்கள். நான் அதிகாரிகளிடம் பேசியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அப்படியிருக்குமாயின், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

78—

புதிய வட்டாட்சியர் அலுவலகம்

***35708—திரு. கே. பழனி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர், மாங்காடு மற்றும் கொளப்பாக்கம் ஆகிய வருவாய் குறுவட்டங்களை இணைத்து புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS